# ஏழாம் அத்தியாயம்

ஏழாம் அத்தியாயத்தின் பரம ஸாரம்

அர்ஜுனன் வினவுகிறான்–"கண்ணா!சிரத்தையுடனும் பக்தியுடனும் அநவரதம் உன்னையே தியானிப்பவன் மிகவும் உயர்ந்தவன் என்று கூறினாயே,நான் உன்னையே எப்பொழுதும் நினைக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.உன்னை நங்கு அறியாதபோது எப்படி நினைக்க முடியும்?ஆகையால் உன்னைப் பற்றி நீ எனக்குத் தெரிவிக்க வேண்டும்"என்றான்

கண்ணன் கூறுகிறான்–அர்ஜுனா!உன் மனம் என்னையே அன்புடன் எப்பொழுதும் சிந்திக்க வேண்டும். ஒரு நொடி நினைக்காமற் போனால் தவித்துப்போக வேண்டும்.நான் யாவற்றையும்விட விலக்ஷணன் என்று நினைக்க வேண்டும்.

ஸத்தியம்,ஜ்ஞானம்,அனந்தம்,ஆனந்தம்,அமலம்,ச்ரிய:பதி என்று என்னை தியானிக்க வேண்டும்.

ஸத்தியம்–ஸ்வரூபம் ஸ்வபாவம் இவற்றில் எப்பொழுதும் எவ்வித மாறுபாடும் இல்லாதவன்.
ஜ்ஞானம்–ஸ்வயம் பிரகாசமானவன் அனந்தம்–எங்கும், எப்பொழுதும்,
எல்லாமாய்,யாவற்றுக்கும் ஆத்மாவாய் இருப்பவன் ஆனந்தம்–அநுகூலமானவன்
அமலன்–எவ்வித மாசும் இல்லாதவனாய்,பிறருடைய மாசையும் போக்குபவன்
ச்ரிய:பதி–ஸர்வலோகமாதாவான மகாலக்ஷ்மிக்கும் நாயகனாக இருப்பவன்

இப்பொழுது நான் கூறிய ஸத்தியத்வாதிகளுக்கு ஸ்வரூப நிருபக தர்மம் என்று பெயர்.இவற்றை அறியாவிட்டால் என் ஸ்வரூபத்தையே உணர முடியாது.வஸ்து இன்னது என்று அறிவதற்கே உறுப்பானவை ஸ்வரூக நிரூபகம்.வஸ்துவை அறிந்த பிறகு அறியக்கூடிய குணங்கள் நிருபித ஸ்வரூப விசேஷணங்கள்.

யானை எப்படி இருக்கும் என்று ஒருவன் கேட்கிறான். கறுப்பாகவும்,பெரியதாகவும் இருக்கும் என்று நாம் கூறினோமானால் எருமையைப் பார்த்து,இதுதான் யானை என்று பிரமித்து விடுவான். அதுவும்தான் கறுப்பாகவும் பெரியதாகவும் இருக்கிறது. யானையின் காதுகள் முறம்போல் பிரம்மாண்டமாக இருக்கும். நீண்ட துதிக்கை இருக்கும்.ஆண் யானைக்கு நீண்ட தந்தம்கூட இருக்கும் என்று நாம் கூறினோமானால், இந்த அடையாளங்களைக் கொண்டு அவன் யானயை உணர்வான்.யானயை அறிவதற்குக் காரணமாகக் கூறப்பெற்றவையே ஸ்வரூப நிரூபக தர்மங்கள்.இவற்றின் மூலம் யானையை ஒருவாறு உணர்ந்தபிறகு,அது ஸாதுவா?துஷ்டனா?என்ன உணவு சாப்பிடும்?எந்த பாஷையில் பேசினால் அதற்குப் புரியும்,என்பவற்றை உணர்க்கிறோமே அவையே நிரூபித ஸ்வரூப விசேஷணங்கள்.

என் ஸ்வரூபத்தை விலக்ஷணமாக அறிவதற்கே காரணமான ஸத்தியத்வம் முதலானவை ஸ்வரூப நிரூபக தர்மங்கள்.இவற்றைக் கொண்டு என்னை உணர்ந்த பிறகு அறியக்கூடிய ஸௌசீல்ய வாத்ஸல்யாதிகளை திருபித ஸ்வரூப விசேஷணங்கள்.என்னைத் தியானிப்பவர் அனைவரும் ஸத்தியத்வாதிகளான ஸ்வரூப நிரூபக தர்மங்களைத் தியானித்தே தீர வேண்டும்.மற்ற குணங்களில்,அந்த அந்த வித்யயில் கூறியுள்ளதையே நினைக்கவேண்டும்.எல்லா குணங்களையும் யாராலும் சிந்தித்துகூடப் பார்க்க முடியாதன்றோ?இந்த விஷயங்களையெல்லாம் மிகவும் உன்னிப்புடன் கேட்டால்தான் புரியும் என்றான் பகவான்.

அர்ஜுனன்–"வாஸுதேவ!மிகவும் உன்னிப்புடன் கேட்க வேண்டும் என்றாயே.உன்னைப் புரிந்து கொள்வது மிகவும் அரிதா என்ன?உன்னை எவ்வளவோ மனிதர்கள் நன்றாக உணர்ந்திருக்கமாட்டார்களா? என்றான்.

பகவான்–மனிதர்கள் என்னை உணரக்கூடிய யோக்யதை பெற்றவர்களே.மரம்,மாடு முதலியனவாக இருந்தால் அவற்றுக்கு யோக்யதையே இல்லையே;அவை எப்படி உன்னை உணர முடியும்? எனலாம்.மனிதன் அவ்வாறு இல்லையே.மனிதர்களில்,பலனை விரும்புகிறவர் பலர் உள்ளனர். ஆயிரக்கணக்கான மனிதர்களில் எவனோ ஒருவனே பலன் கிட்டும் வரை

முயல்கிறான். முயல்பவரில் கோடியில் ஒருவனே என்னை அறிந்து என்னிடம் பலன் பெற முயல்கிறான். அறிபவரிலும் கோடியில் ஒருவனே என்னையே பலனாகவும் உபாயமாகவும் உணர்ந்து, என்னாலேயே என்னை பெற முயல்கிறான். உண்மையில், ஆராய்ந்து பார்த்தால் இப்படிப்பட்ட அதிகாரி கிடைப்பது மிகவும் துர்லபமே என்றான் கிருஷ்ணன்.

அர்ஜுனன்—"கண்ணா! உனக்கே அஸாதாரணமான அருமை பெருமைகளை எல்லாம் என் மனத்திலும் நிலைத்து நிற்கும்படி உபதேசிக்க வேண்டும்" என்றான்.

ஸ்ரீ கிருஷ்ணன் தன் மெருமைகளை விவரமாக உபதேசிக்க தொடங்கினான். அசேதனம், சேதனம் என்று இரண்டு பரக்ருதிகள். அசேதனம் என்பது அறிவில்லாத வஸ்து. சேதனன் என்பவன் அறிவுள்ளவன். ப்ரகிருதி என்ற காரணமான வஸ்து மஹத் அஹங்காரம். பஞ்ச தந்மாத்திரை, பஞ்சபூதங்கள், பதினொரு இந்திரியங்கள் இவ்வாறாகப் பரிணமித்து, போக்கியமாகவும், போகோபகரணமாகவும் போகஸ்தானமாகவும் பலவாறாகப் பரிணமிக்கிறது. நம்முடைய உடல் இந்திரியங்கள் முதலியவைகூட அதன் பரிணாமங்கள்தாம். இதற்கு அறிவு இல்லயாகையால் இது அபரா பிரகிருதி—தாழ்ந்ததான காரண வஸ்து எனப்பெறுகிறது.

சேதனன் என்பவன் அறிவுள்ள ஜீவன். அசேதனமான வஸ்து சேதனாலேயே தாங்கப் பெறுகிறது. உடலை ஜீவன்விட்டால் அது வெட்டின மரம் போல் உடனே சாயும். ஜீவன் விட்ட உடல் சரீரமேயன்று, அது சடலமே. அறிவுள்ள வஸ்துவாகையால் ஜீவன் பரா பிரகிருதி—உயர்ந்ததான காரணவஸ்து எனப் பெறுகிறான்.

பிரளய காலத்தில் மிகவும் ஸூக்ஷ்மமாக இருந்த இந்தப் பிரகிருதிகளே ஸ்ருஷ்டி காலத்தில் ஸ்தூலமாக மாறுகின்றன. நாம ரூப விபாகமற்ற தசை அதாவது உருவமும் பெயரும் இல்லாத தசை ஸூக்ஷ்ம தசை. நாம ரூபத்தைப் பெறும் நிலையே ஸ்தூல தசை. ஜீவனுக்கு ஸூக்ஷ்ம தசையாவது அறிவின் அத்யந்த ஸங்கோசமே. ஸ்தூல தசை என்பது அறிவின் வளர்ச்சியே.

ஜீவனுடைய ஸ்வரூபத்தில் எவ்வித மாறுபாடும் கிடையாது. அசேதனம், சேதனம் ஆகிய இரண்டு வஸ்துக்களும் எல்லா நிலையிலும் எனக்கு ஷேமமாகவே இருக்கின்றன. இந்தச் சராசரமான ப்ரபஞ்சங்களை எல்லாம் நானே படைக்கிறேன். நானே அழிக்கிறேன். என்னுடைய கல்யாண குணங்களுக்கு அளவே கிடையாது. எனக்கு நிகரான வஸ்துவோ என்னைவிட உயர்ந்த வஸ்துவோ முக்காலத்திலும் இல்லை.

ஒரு நூல், பல மணிகளைத் தாங்குவதுபோல் நான் ஒருவனே அனைத்தயும் தாங்குகிறேன். நூலும் கண்ணுக்குப் புலப்படாமல் இருந்துகொண்டே பல மணிகளைத் தரிக்கிறது. நானும் கண்ணுக்குப் புலப்படாதவனாகவே யாவற்றையும் தரிக்கிறேன். மணிகளின் உள்ளே மாத்திரம்தான் நூல் இருக்கும். நானோ, எல்லா வஸ்துக்களிலும் உள்ளும் புறமும் நிறைந்திருக்கிறேன்.

சேதனம், அசேதனம் எல்லாப் பொருள்களும் எனக்குச் சரீரம்; நான் யாவற்றிற்குக்கும் ஆத்மா. எல்லா வஸ்துக்களும் என்னிடமே ஸாக்ஷாத்தாகவே இருக்கின்றன. வஸ்துக்களில் உள்ள ரூபம், ரஸம், கந்தம் முதலிய குணங்கள் அந்த வஸ்துக்களின் மூலம் என்னிடம் உள்ளன.

உலகில் உள்ள அசேதனமான பொருள்கள் யாவற்றிலும் ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்கள் இருந்தாலும், சிலவற்றில் ஸத்துவகுணம் அதிகமாக இருக்கும்; அவை ஸாத்துவிகம் எனப்பெறும். ரஜோகுணம் அதிகமாக உள்ளவை ராஜஸங்கள். தமோகுணம் தலையெடுத்திருப்பவை தாமஸங்கள். இவை யாவும் என்னிடமிருந்தே உண்டாயின. என்னிடமே இருக்கின்றன. நான் அவற்றில் இல்லை என்றான் கீதாசாரியன்.

விஜயன்—"மாதவ! நீ இல்லாத இடமில்லை. எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறமும் நீ நிறைந்திருக்கிறாய். இந்த விஷயத்தை நீயே தெளிவுபடுத்தியிருக்கிறாய். இப்படி இருக்க, அவற்றில் நான் இல்லை என்று கூறுவதன் பொருள் எனக்கு விளங்கவில்லையே? என் ஸந்தேஹத்தைத் தீர்க்க வெண்டும்" என்றான்.

பகவான்—அர்ஜுன!நான் எங்கும் இருக்கிறேன் என்பது வாஸ்தவமே.'அவற்றில் நான் இல்லை' என்று கூறியதன் கருத்து அவற்றால் எனக்கு எவ்வித உபகாரமுமில்லை என்பதே.ஜீவர்கள் உடலில் இருக்கின்றனர்.அவர்கள்தாம் அவற்றைத் தாங்குகின்றனர். அவர்கள் அவற்றில் இல்லாமற் போனால் அவை அழியும். ஆக சரீரத்தின் இருப்பு ஆத்மாதீனமே.

ஆனாலும்,சரீரத்தாலும் இவர்களுக்குப் பற்பல பலங்கள் ஸம்பவிக்கின்றன. 'சரிரமாத்யம் கலு தர்மஸாதனம்' என்றனர்.சரீரம் இல்லாமற் போனால்,ஜீவன் எந்த விதமான நல்ல கரியத்தையும் செய்ய முடியாதே.கண் இல்லாமற் போனால் பகவானையும் பாகவதர்களையும் ஸேவிக்க முடியுமா?காது இல்லாமற் போனால் நல்ல விஷயங்களைக் கேட்க முடியுமா?ஆக சரீரத்தாலும் இத்திரியங்களாலும் ஜீவாத்மாக்களுக்கு நிறைய உபகாரங்கள் ஸம்பவிக்கின்றன என்பதை யாரேனும் மறுக்கவோ,மறைக்கவோ முடியுமா?

சரீரத்தால் ஜீவர்களுக்குப் பலவகை உபகாரங்கள் ஸம்பவிப்பதுபோல் என் உடலான இந்தப் ப்ரபஞ்சத்தால் எனக்கு எவ்வித உபகாரமும் கிடையாது. நான் அவாப்த ஸம்ஸ்தகாமன்.இவற்றைப் படைப்பது முதலிய எல்லா வியாபரமும் லீலையே.நான் எவ்விதப் பயனையும் கருதி அவற்றில் இல்லை.

ஸத்துவம்,ரஜஸ்,தமஸ் என்ற மூன்று குணமுள்ள இந்தப் பொருள்களெல்லாம் தோஷம் நிறைந்தவை.ஆபாஸமானவை;சாச்வதமில்லாதவை.பிரம்மா முதல் எறும்பு வரையிலான இந்த ஜந்துக்கள் அவற்றின் தோஷத்தை உணரவில்லை.அவற்றையே போக்கியமாகக் கருதி மயங்கிக் கிடக்கின்றன.நானோ கல்யாண குணங்கள் நிரம்பியவன். தோஷமே இல்லாதவன்;பரம போக்யமானவன்;சாச்வதமானவன்;என்றுமே போக்கியதை குன்றாதவன்.என்னுடைய இந்த அருமை பெருமைகளயெல்லாம் யாருமே உணர்வதில்லை என்றான்.

அர்ஜுனன்—வாஸுதேவ!நீ எங்கும் இருக்கிறாய்.நீ இல்லாத இடமே இல்லையன்றோ? ஜீவர்கள் ஏன் உன்னைக் காணவில்லை?பொருள் இல்லாமற் போனால் கண் இருந்தும் காண முடியாது.பொருள் இருந்தாலும் கண் இல்லாமற் போனால் காண முடியாது.நீயோ எங்கும் இருக்கிறாய்.எங்களுக்கோ கண் இருக்கிறது, ஆனால் யாருமே உன்னைக் காண முடியவில்லையே அது ஏன்? என்றான்.

பகவான்—நான் எங்கும் நிறைந்திருக்கிறேன் என்பது உண்மையே.ஜீவராசிகளான உங்களுக்கும் கண் இருக்கிறது என்பது வாஸ்தவமே.ஆனால் உங்களுக்கும் எனக்கும் நடுவில் திரை ஒன்று இருக்கிறது.என்னை நீங்கள் காண முடியாமல் அது மறைக்கிறது.

அர்ஜுனன்—''கண்ணா!அந்தத் திரை எது?அது எங்கே இருக்கிறது?அது யாருடையது? அதை யார் விரித்திருக்கின்றனர்?விவரமாகக் கூற வேண்டும்'' என்றான்.

பகவான்—பக்தனே!அந்தத் திரைக்கு மாயை என்று பெயர்.மாயை என்பதற்கு பொய் என்று பொருளல்ல;ஆச்சரியமான சக்தியுடையது என்று பொருள். அதுதான் பிரகிருதி.ஸத்துவம்,ரஜஸ்,தமஸ் என்ற மூன்று குணமுள்ளது அது. பக்தர்களான ஜீவர்களின் உடம்பு,இந்த்ரியங்கள்,அவர்கள் அநுபவிக்கும் பொருள்கள் இவை அனைத்துமே அந்தப் பிரகிருதியின் காரியம்தான். நீ எங்கும் மாயையைக் காண்கிறாயே தவிர,மாயாவியான என்னைக் காணவில்லை.

அந்த மாயை என்னுடையது.விளையாட்டில் முனைந்திருக்கும் நான் தான் அந்த மாயையை விரித்திருக்கிறேன்.ஜீவர்கல் என்னைக் காணக்கூடாது என்பதற்காகவே அந்தத் திரையை விரித்திருக்கிறேன்.அவர்கள் செய்திருக்கும் பாவங்கள்தாம் அதற்குக் காரணம்.எவ்வளவு பலசாலியாக இருந்தாலும் அவன் தன் முயற்சியால் அதை அகற்றி என்னைக் காண முடியாது.பிரகிருதி என்ற வஸ்துவின் குணங்களால்—கயிறுகளால் ஜீவர்கள் பிணைக்கப்பெற்றிருக்கின்றனர்.(குணம் என்ற சொல்லுக்கு 'கயிறு' என்றும் பொருள் உண்டு)

# ஏழாம் அத்தியாயம்

அர்ஜுனன்–''மாதவ!எவ்வளவு பலசாலியாக இருந்தாலும் மாயையை அகற்றி உன்னைக் காண முடியாது என்றால்,மாயை அகல்வதற்கான வழிதான் என்ன?பாவிகளான ஜீவர்களுக்கும் உன்னைக் காண வேண்டும் என்ற விருப்பம் ஏதாவதொரு நாள் ஏற்படலாம் அல்லவா? என்றான் விஜயன்

வாஸுதேவன்–''விஜய!மிகவும் ஸாதாரண ஜந்துவான குருவி பிணைத்த பிணையை ஜீவர்களால் அவிழ்க்க முடியாது. ஸர்வசக்தியான நான் கட்டிய கட்டை இவர்கள் எப்படி அவிழ்க்க முடியும்?ஸமர்த்தனுயும் ஸர்வஜ்ஞனுயும் பரம்காருணிகனுகயும் இருக்கும் என்னையே சரணமாகப் பற்றினால் தான் மாயை என்ற திரை விலகும். கட்டு அகலும். அந்தக் கட்டு அகல வேண்டும் என்றால்,என் திருவடிகளில் ஒரு கட்டைப் போட வேண்டும். அதாவது என் திருவடிகளையே கட்டிக்கொண்டு கதற வேண்டும். என்னிடத்தில் சரணாகதி செய்து,தியானவிரோதியான பாவங்களைப் போக்கி,அநவரதம் என்னையே அன்புடன் நினைத்தாலே திரை விலகும். 'என்னை ஸேவிக்கலாம்' என்றான்.

அர்ஜுனன்–"பக்தவத்ஸல!உன்னையே சரணமாகப் பற்றினால் மாயை என்ற திரை அகலும் என்றால்,ஏன் எல்லோரும் உன்னை சரணமாக அடைந்து மாயை என்ற திரையை அகற்றச் செய்து உன்னை ஸேவிக்கக் கூடாது?ஸுலபமான இந்தச் செயலை அனைவரும் செய்யலாமே" என்றான்.

பகவான்–நண்ப!உலகமறியாத சிறுபிள்ளையாக இருக்கிறாயே நீ!நானொருவன் இருப்பதாகவே பலர் கருதவில்லை. அப்படிக் கருதுபவர்களிலும் பலர் என்னைப் பெரியவனாக ஏற்பதுமில்லை. இந்த லக்ஷணத்தில் "என் திருவடியில் விழு" என்று நான் கூறியதை அவர்கள் பொருட்படுத்தவா போகின்றனர்? என்றான்.

அர்ஜுனன்–"பரமேச்வர!இப்படிக்கூடவா சில மனிதர்கள் இருப்பார்கள்? இவர்கள் எந்த கோஷ்டியைச் சேர்ந்தவர்கள்?இவர்களுக்குள் வித்யாஸம் உள்ளதா?இவற்றையெல்லாம் எனக்கு விவரித்துக் கூற வேண்டும்?"என்றான்.

க்ருஷ்ணன்–பாரத!பாவம் செய்தவர் நாலு வகையினர். ஒரு வகையினரைவிட மற்ற வகையினர் பாவத்தில் விஞ்சியவர். மூடர், நராதமர்,மாயயா அபஹ்ருதஞ்ஜானர், ஆஸுரம்பாவமாச்ரிதர் என்ற நாலு வகையினரும் பாவிகளே.

'உடல் வேறு,ஆத்மா வேறு' என்று தேகாத்ம விவேகமே இல்லாதவர்களும் என்னைப் பற்றிய சிந்தையே இல்லாதவர்களாயும்,உண்டி,உடை இவற்றைப்பற்றிய கவலையே மிக்கவர்களாயும் இருக்கும் கேவல ஸம்ஸாரிகளே மூடர்கள். இவர்களா என்னைப் பெறுவதற்கு சரணாகதி செய்யப்போகின்றனர்?

நராதமர் என்பவர்,அறிவு பிறந்தும் கெட்டவர். நானொருவன் இருக்கிறேன் என்ற எண்ணம் இவர்களுக்கு உள்ளது. ஆனால்,இவர்கள் எனது ஸௌசீல்யம்,ஸௌலப்யம் முதலிய சிறந்த குணங்களைக் கவனியாமல்,என் அருமை பெருமைகளை மாத்திரம் பார்த்து,தூர அகன்றுவிடுகின்றனர்.

"நாம் பாவிகள். பகவான் எல்லாம் அறிந்தவன். அவன் பரம சக்தன். நாம் அவனிடம் நெருங்கினால் நம்மைத் தொலைத்து விடுவான்" என்று இல்லாத கற்பனைகளையெல்லாம் தாங்களே செய்துகொண்டு தூர விலகிவிடுகின்றனர். "நாம் எவ்வளவு பாவம் செய்தாலும் அவனிடம் சரணாகதி செய்தால் நம் பாவகளையெல்லம் க்ஷமித்துவிடுவான். அவன் பேரைச் சொன்னால் போதும்;அவன் ஊரைச் சொன்னால் போதும்;நம் பாவங்கள் விலகிவிடும். பகவான் மிகவும் எளியவன். நம் தோஷத்தை அவன் பார்க்கவே மாட்டான்" என்ற தெளிவு இவர்களுக்குப் பிறக்கவில்லையே!அதற்குக் காரணம்,இவர்களுடைய பாவம்தான். மூடர்களைவிட இவர்கள் பாவிகள். அவர்கள் அறிவே இல்லாதவர்கள். இவர்கள் அறிந்தும் கெட்டுப் போனவர்கள்.

என்னைப் பற்றி மிகத் தெளிவாக அறிந்திருந்தும்,வஞ்சகர்களின் கபடப் பேச்சைக் கேட்டு உள்ள ஜ்ஞானத்தைப் பறிகொடுத்துவிட்டு அவர்கள் கோஷ்டியில் சேர்ந்து கொடி

பிடிப்பவர்களே மாயயா அபஹ்ருதஜ்ஞானர். மாயையால் கபடமான நயவஞ்சகப் பேச்சுக்களால் அபஹ்ருதஜ்ஞானர்–பறிக்கப்பட்ட அறிவுடையவர், இவர்கள் நராதமர்களைவிடப் பாவிகள். அவர்கள் நாஸ்திகர்களாக மாறவில்லை. இவர்களோ நாஸ்திகர்களாகவே மாறிவிட்டனரே!

ஆஹுரம்பாவமாச்ரிதர் என்பவர் ஜன்மாந்தரங்களில் செய்த மிகக் குரூரமான பாவங்களால், பிறவி முதற்கொண்டே என்னிடம் த்வேஷம் நிரம்பியவர். இவர்கள் ராவண ஹிரண்யாதிகளின் கோஷ்டியைச் சார்ந்தவர். மூன்றும் வகுப்பினரைவிட மிகவும் பாவிகள். அவர்களுக்காவது நடுவில் த்வேஷம் ஏற்பட்டது. இவர்களுக்குப் பிறவி முதற்கொண்டே த்வேஷம் நிரம்பியுள்ளதே!

அர்ஜுனன்–"க்ருஷ்ணா! இந்த உலகில் புண்ணியம் செய்பவர்களும் இருப்பார்களே. உன் விஷயத்தில் அவருடைய நிலை என்ன? அவர்களுக்குள்ளேயும் ஏதேனும் பிரிவு உண்டா?" என்றான்.

கண்ணன் கூறலானான்–ஸாரஜ்ஞனே! புண்ணியாத்மாக்களையும் நாலு வகையினராகப் பிரிக்கலாம். ஆர்த்தன், அர்த்தார்த்தி, ஜிஜ்ஞாஸு, ஜ்ஞானி என்பவரே அவர்கள். இவர்கள் எந்தப் பலனை விரும்பினாலும் என்னிடம் சரணாகதி செய்து அந்தப் பலனை வேண்டுவதால் நால்வரும் புண்ணியசாலிகளே.

ஒருவனுக்கு ஏதோ காரணத்தால் செல்வங்களெல்லாம் போய்விட்டன. அவன் செய்த முயற்சி பலிக்கவில்லை. அப்படிபட்டவன், இழந்த செல்வத்தைப் பெறுவதற்காக என்னிடம் சரணம் புகுகிறான். ஆர்த்தன்–செல்வங்களெல்லாம் போய்விட்டனவே, போன செல்வத்தை மீட்பதற்கு வேறு வழி தெரியவில்லையே என்று வருந்துபவன்.

புதியதாகப் பணக்காரனாக விரும்புகிறவன் அர்த்தார்த்தி. இவனும் வேறு வழியால் பணத்தை ஸம்பாதிக்க இயலாதவனாய் என்னிடம் சரணமடைகிறான். இவர்கள் இருவரும் செல்வத்தை விரும்புகிறவர்கள் என்ற வகுப்பிலேயே சேர்ந்தவர்கள். இழந்த செல்வத்தைப் பெற விரும்புகிறான் ஒருவன். மற்றவன் நூதனமாகச் செல்வத்தைப் பெற விரும்புகிறான். இவ்வாறுதான் வ்யத்யாஸம்.

ஜிஜ்ஞாஸு என்பவன் ஜ்ஞானஸ்வரூபனான தன் அநுபவத்தை ஆசைப்படுகிறான். ஜீவாத்ம ஸாக்ஷாத்காரமாகிற கைவல்யத்தை ஆசைப்படுகிறான். இந்த அதிகாரி, இவனும் அதைப் பெறுவதற்காக என்னைச் சரணமாகப் பற்றுகிறான். அழியக்கூடிய அர்த்தங்களைவிடப் பன்மடங்கு உயர்ந்தது ஜீவாத்மா. ஆகையால் பொருளை விரும்பிச் சரணமடைபவர்களைவிட தன்னைக் காண விரும்பி சரணாகதி செய்பவன் உயர்ந்தவன். இவன் அவர்களைவிட புண்ணியசாலி.

ச்ரிய: பதியான எனக்குச் சேஷபூதன் தான் என்ற உணர்வு பெற்று என்னையே உபாயமாகவும் பலனாகவும் அத்யவஸித்திருப்பவனே ஜ்ஞானி. இவனும் என்னைப் பெறுவதற்காக என்னைச் சரணமாகப் பற்றுகிறான். ஜீவாத்மாவைவிடப் பரமாத்மாவாகிற நான் மிகவும் உயர்ந்தவனாகையாலும் என் அநுபவம் அனந்தமாயும் ஸ்திரமாயும் இருப்பதாலும் பரமாத்மாவான என்னைப் பெற விரும்புகிறவன் ஜிஜ்ஞாஸுவைவிட மிகவும் உயர்ந்தவன். நம்மாழ்வாரும் ஜீவாத்மாநுபவத்தைவிடச் 'சிற்றின்பம்' என்று ஸாதித்துள்ளார். ஜிஜ்ஞாஸுவைவிட ஜ்ஞானி மிகவும் புண்ணியசாலி.

அர்ஜுனன் வினவுகிறான்ன்–"அச்யுத! புண்ணியசாலிகளான இந்த நால்வரில் ஜ்ஞானிக்கு உள்ள தனிச் சிறப்பு என்ன?" என்றான்.

பகவான்– ஜ்ஞானி என்னையே விரும்புகிறான். மற்றவர் வெறு பலனைக் கோருகின்றனர். அவர்களுக்குப் பலனில் தான் ஆசை. அந்தப் பலனைக் கொடுக்கிறபடியால் என்னிடத்திலும் ப்ரீதி. ஜ்ஞானிக்குப் பலன் உபாயம் எல்லாம் நானேயாகையால் என் ஒருவரிடமே அவனுக்குப் ப்ரீதி. மற்றவர் பலன் கிட்டும்வரை என்னுடன் தொடர்பு கொண்டிருப்பர். பலன் கிட்டியதும் என்னை மறந்து விடுவர். ஜ்ஞானி என்னையே

விரும்புகிறபடியால் அவன் எப்பொழுதும் என்னுடனேயே சேர்ந்திருப்பான். ஜ்ஞானி என்னிடம் செய்யும் அன்புக்கு அளவே கிடையாது. நான் அவனிடம் செய்யும் அன்பு மிகவும் அளவுப்பட்டது. அவன் செய்யும் அளவு நானும் அவனிடத்தில் அன்பைப் பொழிந்தாலும் அவன் என்னிடம் அன்பைச் செலுத்தியபிறகுதான் நான் அவனிடம் அன்பைச் செலுத்துகிறேன். ஆகையால் அவன் மிகவும் உயர்ந்தவன். என்னிடம் பொருள் முதலியவற்றைப் பெறுபவர் உதாரர். என்னையே பெற விரும்பும் ஜ்ஞானி எனக்கே ஆத்மா" என்றான்.

அர்ஜுனன்–"கண்ணா! கொடுப்பவர்களையன்றோ உலகில் உதாரர் என்பர். நீ பெறுபவனை உதாரன் என்று கூறுகிறாயே? சராசராத்மகமான ப்ரபஞ்சத்திற்கெல்லாம் நீதானே ஆத்மா. உனக்கு ஓர் ஆத்மா கிடையாது எனறன்றோ வேதாந்தங்கள் கூறுகின்றன? இப்படியிருக்க ஜ்ஞானியை உனக்கு ஆத்மாவாகக் கூறுவது எப்படி ஸங்கதமாகும்? என் ஸந்தேஹங்களை தீர்க்க வேண்டும்?" என்றான்

பகவான்–அர்ஜுன! நான் நாலு விதமான புருஷார்த்தங்களையும் வாரி வழங்குகிறேன். கொடுக்காமல் என்னால் ஒரு நொடிகூட இருக்கமுடியாது. என்னிடம் பெறுபவர்களால்தான் என் ஔதார்யம் ஜீவிக்கிறது. நான் அவர்களுக்கு பணம் முதலியவற்றை கொடுக்கிறேன். அவர்கள் எனக்கு வள்ளல் உதாரன் என்று பெயரைக் கொடுக்கின்றனர். ஆகையால் அவர்களை உதாரர் என்று கூறினது பொருத்தமே.

வேதாந்தங்கள், யாவற்றுக்கும் என்னை ஆத்மாவாகக் கூறுகின்றன. நான் ஜ்ஞானியை எனக்கு ஆத்மாவாக கருதுகிறேன். இது என் ஸித்தாந்தம். நான் இல்லாமல் ஜ்ஞானி இல்லை. என்னைப் பிரிந்து அவன் வாழ மாட்டான். அவனைப் பிரிந்து நானும் வாழமாட்டேன். ஆத்மா இன்றிச் சரீரம் வாழுமா? ஆகையால்தான், ஜ்ஞானியை எனக்கு ஆத்மாவாக குறிப்பிட்டேன் என்றான் பகவான்.

அர்ஜுனன்–"வாசுதேவ! ஜ்ஞானி என்பவனுக்கு உள்ள ஜ்ஞானம் எத்தகையது? அது எப்பொழுது கிடைக்கும்? அவன் பெருமைஎத்தகையது?" என்றான்.

பகவான்–"அர்ஜுன! நானே தாய், தந்தை, உபாயம், பலன் எல்லாம் என்ற தெளிவு பெற்றவனே ஜ்ஞானி. இந்த ஜ்ஞானம் எத்தனையோ புண்ணிய ஜன்மங்களுக்குப் பிறகுதான் கிடைக்கும். இந்த ஜ்ஞானம் உண்டானவன் உடனே என்னை ஆச்ரயிப்பான். என்னிடத்தில் வேறு பலனை அபேக்ஷிப்பவர்களே கிடைக்கமாட்டார்களென்றால் என்னிடத்தில் என்னயே அபேக்ஷிக்கும் ஜ்ஞானி எங்கே கிடைக்கப் போகிறான்? இவன் பெருமை அளவற்றது" என்றான்.

அர்ஜுனன்–மற்றப் பலனை விரும்புகிறவர்கள் என் உன்னிடம் வேண்டிப் பெறுவதில்லை? என்றான்

பகவான்–"ஜனங்களுக்கு ஆசை நிறைய இருக்கிறது. அந்த ஆசை அவர்களுடைய அறிவைக் கெடுத்துவிடுகிறது. மற்ற தேவதைகளை ஆராதித்து அல்பமான பலனைச் சீக்கிரம் பெற்றே அவர்கள் பழகிப் போயிருக்கின்றனர். மற்ற தேவதைகளும் என் சரீரம்தான். இதை அவர்கள் உணரவில்லை. நான் அதை உணர்ந்திருக்கிறபடியால் அந்த சிரத்தையை நானே வளர்க்கிறேன். அவர்களும் தேவதைகளை ஆராதிக்கின்றனர். நானே பலனை அவர்கள் மூலமாக அளிக்கிறேன். அல்ப புத்தியால் அல்ப பலனை விரும்பி அல்பதேவதையை ஆராதிப்பவனுக்கு அல்ப பலனே அமையும். அதுவும் அழியும். " என்றான்.

அர்ஜுனன்–"பகவானே! நீ கண்ணுக்குப் புலப்படாமல் இருந்தால் உன் பெருமைகளை உணராமல் மற்றவரை ஆராதிக்கலாம். நீதான் எல்லோருக்கும் புலப்படும்படி ஸேவை ஸாதிக்கிறாயே? இப்படி இருக்க ஏன் எல்லோரும் உன்னை ஆச்ரயிக்கவில்லை?"என்றான்.

பகவான்–"பாண்டவ! மூடர்களாயும், என் அவதாரத்தின் பெருமைகளை உணரக்கூடிய பாக்யமற்றவர்களாயும் இருக்கும் ஜனங்கள் என்னைப் பகவானாகவே நினைக்கவில்லையே. தங்களைப் போலவே என்னையும் ஒரு ஜீவனாகவே நினைக்கிறார்கள். போன ஜன்மத்தில்

கொசுவாகவோ,பூச்சியாகவோ பாவத்தால் பிறந்தவனென்றும்,புண்ணியத்தால் இந்த ஜன்மத்தில் மனிதனுக பிறந்தவனென்று கருதுகின்றனர்.மனிதன் போன்ற என் நடை உடை பாவனைகளையே பார்க்கின்றனறே தவிர என் தெய்வீகச் செயலைக் காணவில்லையே.பல வருஷங்களுக்கு முன் இறந்துபோன ஸாந்திபனியின் புத்திரனை நான் கொண்டு வந்தேனே!வைதிக புத்திரர்களைக் கார்ய வைகுண்டத்திலிருந்து அழைத்து வந்தேனே.கரியாக இருந்த பரீக்ஷித்தைக் குமாரனுக ஆக்கினேனே;இவையெல்லாம் மனிதன் செய்யக்கூடிய செயலா?இவற்றையெல்லாம் ஆராய்ந்து என்னை உணரக்கூடிய பாக்கியம் இவர்களுக்கு இல்லை என்றுதான் கூறவேண்டும்.

இதற்கு முன்னே இருந்தவர்,இப்பொழுதுயிருப்பவர்,இனி உண்டாகப் போகிறவர் இவர்களில் யாருமே என்னை உணரவில்லை.நான் அவர்களை உணர்ந்திருக்கிறேன். மாயை என்ற திரை,என்னைக் காணவொட்டாமல் எனக்கு மறைக்காது.அது என்னுடைய மாயை;விசித்திரமான மாயை என்றுன் பகவான்

அர்ஜுனன்-"கண்ணு!உன் அநுபவம் கிடைத்தால் ஸந்தோஷம்.கிடைக்காமற்போனுல் வருத்தம் என்ற நிலை வயது வளர வளர ஸம்பவிக்கப் ப்ரஸக்தி இல்லை.அப்பொழுது இவனுக்கு மற்ற விஷயங்களின் அநுபவம் ஸம்பவித்து அதில் விருப்பு வெறுப்பு ஏற்பட்டுவிடுகிறது.பிறக்கும்போது இந்த நிலை இல்லையே. அப்பொழுது ஏன் உன் விஷயத்திலேயே ஈடுபாடு உண்டாகக்கூடாது" என்றுன்.

பகவான்-"அர்ஜுன!இந்த ஜீவன் முதல் முதலில் இப்பொழுதுதான் பிறந்தான் என்று நினைக்காதே.இவன் பிறந்த பிறவிக்கு எண்ணிக்கையே கிடையாது. எல்லாப் பிறவிகளிலும் என்னை மறந்து மற்ற விஷயங்களையே அநுபவித்து அந்த வாஸனை அதாவது ஸம்ஸ்காரம் பலமாக இருப்பதனுல் பிறக்கும்போது அந்த மோஹமேதான் ஏற்படும்.குழந்தை பிறந்தவுடனே அழுகிறது. தாய்ப்பால் கிடைத்தவுடன் அழுகை நின்று விடுகிறது.என்னைக் காணத் துடித்து அழுவதாக இருந்தால் என் ஸேவை கிடைக்கும்வரை அழுகையை நிறுத்தாதே? ஆகையால் நிஷ்காம்யமான கர்மாவினுல் எவர்கள் பாவங்களை அழிக்கின்றனரோ அவர்களே என்னிடத்தில் மிகவும் பற்றுள்ளவராவர்" என்றுன்.

அர்ஜுனன்-"கண்ணு!ஐச்வர்யம் முதலிய பலனை விரும்புகிறவர்களில் யார் யார் உன்னை எப்படி அறிந்து வழிபட வெண்டும்?" என்றுன்.

பகவான்-"விஜய!கைவல்யத்தை விரும்புகிறவன் ப்ரம்மம்,அத்யாத்மம், கர்ம இவற்றை உணர வேண்டும்.ஐச்வர்யார்த்தி அதிபூதம்,அதிதைவம் இவற்றை உணர வேண்டும்.மூன்று அதிகாரிகளும்,அதியஜ்ஞும் என்பதையும் கடைசியில் பகவானை எப்படி நினைக்க வேண்டும் என்பதையும் உணர வேண்டும்" என்றுன்.

ஏழாம் அத்தியாயத்தின் பரம ஸாரம் முற்றும்